# 70 வயது இளமைத் துடிப்பு

ராதா காசிராமு

ஆறு முழப் புடவையில் நள்ளிரவு 12 மணி வரையில் தாம்சன் சமூக மன்றத்தில் கோலாட்டம் ஆடிக் கொண்டிருந்தார் திருவாட்டி ஆர் கிருஷ்ணவேணி.

இது அவருக்கு வழமையான ஒரு நடவடிக்கை.

“கிழவிகள் மேடையில் ஏறி ஆடுகிறார்கள் பாருங்கள்” என்று சிலர் சொல்லும் கேலிப் பேச்சுகளை 70 வயது கொள்ளுப் பாட்டி காதில் வாங்கிக் கொள்வதே இல்லை.

“50 வயதுக்கும் மேற்பட்ட 10 பேரைக் கொண்ட இவரது தங்கப் பெண்கள்” நடனக் குழுவில் பல மேடைகளில் கோலாட்டம், கும்மியாட்டம் ஆடியுள்ளனர்.

மலேசியாவின் போர்ட் டிக்சன் வரை சென்று நிகழ்ச்சி படைத்துள்ளனர்.

ஆடலுடன் நடிப்பிலும் இவர் பிரபலம். பல ஆண்டுகளாக வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் நடித்து வரும் இவர் இதுவரை 500க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார்.

பிரபல வானொலி தொடர் நாடகமான ‘ஐடியா ஐய்யாக் கண்ணு’ என்ற நாடகத்தில் நடித்து புகழ் பெற்றவர்.

தாம்சன் சமூக மன்றத்தின் இந்திய நற்பணி செயற்குழுவில் துணை பொருளாளராக உள்ள இவர், சமூக மன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்.

“வயதைப் பற்றி நான் நினைப்பதே இல்லை அதனால் என்லால் சுறுசுறுப்பாக இருக்க முடிக்கிறது,” என்றார் கிருஷ்ணவேணி.



படம் : தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

திருவாட்டி கிருஷ்ணவேணியில் அடுத்த திட்டம், கோல்டன் கேர்ள்ஸ் நடனக்குழுவை ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் ஆட வைப்பது.

காலை 6.30 மணிக்குத் தொடங்கும் இவரது நாள் நள்ளிரவு வரை நீடிக்கிறது.

வீட்டில் சமையல் செய்வது, தமது ஒரு வயது கொள்ளு பெத்தி சிவாஷினியை கீழே விளையாடத் அழைத்துச் செல்வது, சமூகப் பணியாற்றுவது, நடனமாடுவது, தமிழ் டியூஷன் சொல்லித்தருவது, ஓய்வு நேரத்தில் கடைத் தொகுதிகளைச் சுற்றிப்பார்ப்பது என துடிப்போடும் மகிழ்ச்சியோடும் வலம் வரும் திருமதி கிருஷ்ணவேணிக்கு இந்த ஆண்டின் “துடிப்பு மிக்க விருது” வழங்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் சமர்ப்பிக்கப் பட்ட 400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேர்களில் இவரும் ஒருவர்.

70 வயதிலும் சுறுசுறுப்பாக பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதற்காக இவருக்கு அவ்விருது அளிக்கபட்டது.

இவருடைய மகள் திருமதி அலமேலு மனோகர் (50) இந்த விருதுக்கு முன்மொழிந்தார்.

திருவாட்டி கிருஷ்ணவேணிக்கு 4 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

## ஏழு பேருக்கு விருது

துடிப்பான மூப்படையும் விழாவை முன்னிட்டு த்ர்ட் ஏ ஜ் இரண்டாவது முறையாக ஏர்பாடு செய்த துடிப்புமிக்க முதியோர் விருதில் திரு சுவா சாய்ஹாங், திரு கோ சொயோக் ஹியோங், திருமதி ஆர் கிருஷ்ணவேணி, திரு டேங் விங் கீ பிபிஎம் மற்றும் திருமதி போனா இயோ-டான்போக் ஹுவா ஆகியோர் விருது பெற்றனர்.

60 வயதிற்கும் மேற்பட்டவர்கள் துடிப்புடன் இருக்க நடத்தப்பட்டு வரும் இவ்விருதுக்கு 400க்கும் மேற்பட்டவர்கள் முன்மொழியப் பட்டிருந்தனர்.

இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில் த்ர்ட் ஏஜ் மன்றத்துடன் முதன் முறையாக புருடென்ஷியல் காப்புறுதி நிறுவனமும், தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு ஆணையமும் இணைந்துள்ளன.

த்ர்ட் ஏஜ் மன்றம் ஏற்பாடு செய்த இந்த விருது வழங்கும் விழாவி வெற்றியாளர்களுக்கு சமூக மேம்பாடு இளையர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் விருதுகளை வழங்கினார்.

வெற்றி பெற்றோர் இவ்வாண்டின் துடிப்புமிக்க மூத்த குடிமக்களுக்குத் தூதர்களாக இருப்பர்.

‘ஓட்ஸ், பழங்கள் நிறைய சாப்பிடுவேன். ஆடுவது எனக்கு உடற்பயிற்சி. அதிகாலையில் எழுந்து விடுவேன். நேரத்தை வீணடிக்க மாட்டேன். இதுதான் என இளமைக்குக் காரணம்.’

- திருமதி கிருஷ்ணவேணி

‘அம்மா என்றுமே சுறுசுறுப்பானவர். அவருடைய சுறுசுறுப்பை என் சிறு வயது முதல் பார்த்து வருகிறேன். துடிப்புமிக்க அம்மா விருது பெற முன்மொழிய முடிவெடுத்தேன்.’

- திருமதி அலமேலு மனோகரன் - திருமதி கிருஷ்ணவேணியின் மகள்